மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, குடிசைகள் என்று சொல்லும்போது பல்வேறு வகைப்பட்ட குடிசைகள் இருக்கின்றன. நாங்கள் சொல்வது 200 சதுர அடி என்ற வரையறை உள்ள குடிசைகள். ஏனென்றால் மிகவும் மோசமாக இருக்கிற ஏழைகளுக்கு முதலில் இத்திட்டத்தை அமுல்படுத்த வேண்டும. 200 சதுர அடி என்கிறபோது 20—க்கு 10 என்ற அளவில்தான் வரும். இந்த அளவுள்ள குடிசைகள் கூட இல்லாமல் எத்தனையோ பேர் நடுவீதிகளிலே குடியிருக்கிறார்கள். 200 சதுர அடி கொண்டதும் வெறும் மண் சுவர் மட்டுமே எழுப்பி, கூரை வேய்திருக்கக்கூடியதுமான குடிசைகளுக்கு மின்சாரம் வழங்குவதுதான் இத்திட்டம். அது முடிந்தபிறகு ஒரு அடி கல்சுவர் வைத்திருந்தால் என்ன செய்யலாம், முழுவதும் கல் சுவராக இருந்தால் என்ன செய்யலாம் என்பது பற்றி பின்னால் பரிசீலிக்கலாம்.

திரு. இல. பலராமன்: தலைவரவர்களே, இத்திட்டத்தின்கீழ் குடிசையில் வாழ்கின்ற சாதாரண மக்கள் மின்சாரத்தைப் பெற்றுக்கொண்டு, அதை நல்லமுறையில் பயன்படுத்த முடியவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? போடக்கூடிய பல்புகள் சில மணி நேரத்திலேயே 'பியூஸ்' ஆகிவிடுகின்றன. காரணம், வோல்டேஜ் அதிகமாக இருக்கிறது. அவர்களாலும் மீண்டும் பல்பு வாங்கிப் போட முடியவில்லை. ஆகவே, வோல்டேஜை கட்டுப்படுத்தி பல்பு தொடர்ந்து எரிய உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஒரு பல்பு போடுகிறோம். பியூஸ் ஆனால் வேறு பல்பு அவர்களே போட்டுக்கொள்ளலாம். அதுகூட முடியவில்லை என்றால் நாம் என்ன செய்வது?

தெருவிளக்குகளுக்கு பியூஸ் யூனிட் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 182—திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா—

தெருவிளக்குகளுக்கு பியூஸ் யூனிட் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: இத் திட்டம் ஏற்கனவே அமுலில் உள்ளது.

திரு. தி. அன்பழகன்: தலைவரவர்களே. தற்போது எல்லா தெரு விளக்குகளுக்கும் இந்த 'ஃபியூஸ் யூனிட்' அமைக்கப்படவில்லை. எல்லா தெருவிளக்குகளுக்கும் பியூஸ் யூனிட் அமைத்தால் இப்படி அடிக்கடி ஃபியூஸ் போவது குறைக்கப்படும். ஆகவே தெருவிளக்கு எரியவில்லை என்ற குறையைப் போக்க இதை முழுமையாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தெரு விளக்கு எரியாததற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அவைகளில் இது ஒரு காரணம். ஆகையால் எங்கெங்கே இத்தகைய அமைப்புகள் தேவையோ அங்கெல்லாம் வைக்கச் சொல்லியிருக்கிறோம். அதேநேரத்தில் தெருவிளக்குகள் எரியாததற்கு தொழில் நுட்ப ரீதியான காரணங்கள் என்னென்ன என்பதை ஒவ்வொரு வட்டாரத்திலும் கண்டறிந்து தெரிவிக்க ஒவ்வொரு கோட்ட மின் பொறியாளரும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவரவர்களே, தெருவிளக்குகளுக்கு 'ஃபியூஸ் யூனிட்' அமைக்கும் முயற்சி இருந்தாலும் வடாற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலைக் கோட்டத்தில் 70 சதவீதம் பல்பு போடப்பட்டிருந்தும் 20 சதவீதம் அல்லது 25 சதவீதம் கூடச் சரியாக எரியவில்லை. அதுபற்றி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் தெரிவித்திருக்கிறோம். 'ஃபியூஸ் யூனிட்' அமைப்பது பற்றி மக்களுக்குக் கவலையில்லை; விளக்கு எரிய வேண்டும். ஆகவே, தெரு விளக்கு எரியாமல் போவதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து, எல்லா விளக்குகளையும் எரியவைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் சொல்லியிருப்பதால் அங்கேயே பதில் பெற்றிருப்பார்கள் என்று கருதுகிறேன். இருந்தாலும், தெருவிளக்குகள் இப்போது பெருமளவுக்கு சீர் செய்யப்பட்டிருக்கின்றன என்பதுதான் மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையிலான தகவல். இன்னும் தொழில் நுட்ப ரீதியாக சில சங்கடங்கள் இருக்கின்றன. உதாரணமாக, பகலிலே வால்டேஜ் குறைகிறது; நடுநிசியில் அதிகமாகிறது அதனால் குண்டு பல்பு தாங்கவில்லை. போட்ட சில நாட்களிலேயே ஃபியூசாகி விடுகிறது. இந்தக் குறையை நிவர்த்திக்க 4 அடி குழல் விளக்குகளை எல்லா இடங்களிலும் அமைக்க வேண்டுமென்று மின்சார வாரியம் அண்மையில் உத்தரவிட்டிருக்கிறது. எந்தெந்த ஊராட்சி மன்றங்கள் அல்லது நகராட்சி மன்றங்கள் மின்சார வாரியத்திற்கு சேரவேண்டிய பணத் த பாக்கியில்லாமல் ஒழுங்காக செலுத்தி வருகின்றனவோ அங்கெல்லாம் மின்சார வாரியத்தின் சொந்தச் செலவிலேயே இந்த 4 அடி குழல் விளக்குகளைப்போட இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற உள்ளாட்சி அமைப்பிலும் ஒழுங்காக பணம் கட்டினால் இந்த குறை மின்சார வாரியத்தினால் நிவர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.10)

திரு. ந. குலசேகரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்குகள் இருந்தும் பல்புகளைப் பொருத்துவதற்கு ஆட்கள் குறைவாக இருக்கிறார்கள் என்று மின் திட்ட ஆலோசனைக் குழுக் கூட்டத்திலே அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே உடனடியாக ஆட்களை அதிகமாக அமர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஆட்களை அதிகப்படுத்த வேண்டாமா அல்லது இருக்கின்ற ஆட்களினுடைய வேலைகளை மாற்றியமைப்பதன் மூலம் செய்ய முடியுமா என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்ந்துதான் முடிவு எடுக்க வேண்டும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, போடப் படுகின்ற பல்புகள் ரொம்பவும் சீப் க்வாலிட்டியாக இருப்பதால் தான் அடிக்கடி ஃபியூஸ் போய்விடுகிறது. ஆகவே உண்மை யிலேயே நல்ல தரமான குவாலிட்டி பல்புகளைப் போடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நல்ல க்வாலிட்டியாகப் போடலாம். காஸ்ட்தான் அதிகமாகும்.

திரு. செ. செம்மலை: தலைவரவர்களே, சில சமயங்களில் ஏற்படுகின்ற அதிக மின் அழுத்தத்தின் காரணமாகத்தான் அடிக்கடி தெரு விளக்குகளின் பல்புகள் ஃப்யூஸ் போகின்ற நிலைமை இருப்பதால் அதைத் தடுப்பதற்கு எலிமினேட்டரை ஒவ்வொரு கம்பத்திலும் பொருத்துவதற்கு ஏற்பாடு செய்து மின்சாரத்தைச் சீராக்குவதற்குரிய வழிமுறையினை அரசு ஆராயுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இது போன்ற தொழில் நுட்ப விவரங்களைப் பற்றி எல்லாம் கேள்வி நேரத்திலே எடுத்து விளக்குவது கடினம். ஆகவே மின் வாரிய நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தின் போது விரிவாகப் பேசலாம்.

திரு. மு. அப்பாதுரை: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது இருக்கின்றவர்களுக்கு எப்படி வேலை கொடுப்பது என்று கேட்டார்கள். அமைச்சரின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். ஹெல்ப்பர் என்று சொல்லக்கூடிய அடிப்படை ஊழியர்கள் உயர் பதவி பெற்று மேலே சென்றுவிட்டார்கள். ஆகவே இப்போது ஹெல்ப்பர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்று கேள்விப் படுகிறேன். ஆகவே அடிப்படை ஊழியர்களை உடனடியாக அதிகமான அளவிலே வேலைக்கு அமர்த்துவதற்கு அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பதவி உயர்வு பெற்றுப் போவது பாவம் இல்லை. ஆனால் இந்த வேலைகளைச் செய்வதற்குப் புதிதாக ஆட்களைப் போட வேண்டுமா அல்லது இருக்கின்ற பணிகளை பங்கிட்டுச் சீரமைப் பதன்மூலம் இதைச் சரி செய்வதற்கு வேறு வழிகள் இருக்கின்றனவா என்பதைத்தான் நான் சொன்னேன். ஆகவே இவற்றை எல்லாம் யோசித்து அதற்குப் பிறகுதான் முடிவு எடுக்க வேண்டும்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, கிராமப்புறங் களிலும் சென்னை நகரிலே இருப்பதைப்போல் சோடியம் வேப்பர் விளக்குகளைத் தெரு விளக்குகளாக அமைக்க அரசு முன்வருமா? அப்படிப்பட்ட விளக்குகள் நல்ல ஒளி வெள்ளமும் தரும், நீண்ட நாட்களுக்கும் உழைக்கும். ஆகவே அதுபோன்ற விளக்குகளை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, முதலீடு அதிகம் தேவைப்படும் ஊராட்சி மன்றங்கள் தாங்காது.

திரு. மு. ப. முனுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகள் கலைக்கப்பட்ட பின் ஊராட்சிகளின் நிதியினை மின் கட்டணம் செலுத்தாமல் பலவிதமான செலவுகளுக்கு ஈடுகட்டி இருப்பதால் அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

(பதில் இல்லை.)

ஈரோட்டிலுள்ள கால்நடைத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை

*வினா எண். 183—திரு கு. ரமணி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பெரியார் மாவட்டம், ஈரோட்டில் கால் நடைத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலையில் தீவனம் உற்பத்தி நடைபெறுகிறதா?

(ஆ) ஆம் எனில், என்னென்ன பொருட்களால் அந்தத் தீவனம் தயாரிக்கப்படுகிறது?

(இ) விவசாயிகளுக்கு தீவனத்தை விநியோகிக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, (அ) சோதனை அடிப்படையில் இதுவரை சுமார் 100 டன்கள் கால் நடைத் தீவனம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.